# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே
# அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 25/26

2014 பிறந்தவர்கள் பின்வரும் 8 குறள்களை மட்டும் ஒப்பித்தல் செய்தல். குறள்களுக்கான பொருள் விளக்கம் கூறத்தேவையில்லை.

1. **கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
   **புண்ணுடையர் கல்லா தவர்.** (குறள் 393)

   கண்ணுடையவர் என்று சொல்வதற்குரியவர் கற்றவரே. கல்லாதவர் தங்களுடைய முகத்தில் இரண்டு புண்களை உடையவராவர்.

2. **விசும்பின் துளிவீழின் அல்லால்மற்று ஆங்கே**
   **பசும்புல் தலைகாண்பது அரிது.** (குறள் 16)

   வானிலிருந்து மழை பெய்யாவிட்டால், இவ்வுலகில் பசுமையான புல்லின் நுனியைக் கூடக் காணமுடியாது.

3. **சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்**
   **பெற்றத்தால் பெற்ற பயன்.** (குறள் 524)

   தன் சுற்றத்தால் தான் சூழப்படும்படி அவர்களைத் தழுவி வாழ்வதே ஒருவன் செல்வத்தைப் பெற்றதன் பயன் ஆகும்.

4. **நாடென்ப நாடா வளத்தன நாடல்ல**
   **நாட வளந்தரு நாடு.** (குறள் 739)

   தன் நாட்டில் வாழும் மக்களுக்கு வேண்டிய செல்வங்களைத் தன்னகத்தே கொண்ட நாடு வளம் நிறைந்த நாடு. பிற நாடுகளின் உதவியை நாடி நிற்கும் நாடு வளம் நிறைந்த நாடாகாது.

5. **வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்**
   **கோல்நோக்கி வாழுங் குடி.** (குறள் 542)

   உலகத்து உயிர்களெல்லாம் மழையை நோக்கி வாழ்கின்றன. அதுபோல மக்கள் அரசனது நல்லாட்சியை நோக்கி வாழ்கின்றனர்.

6. **அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து**
   **தீதுஇன்றி வந்த பொருள்.** (குறள் 754)

   பொருள் ஈட்டும் வகை அறிந்து பிறருக்குத் தீமை செய்யாது வந்த பொருள் அறத்தையும் கொடுக்கும், இன்பத்தையும் கொடுக்கும்.

7. **ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்**
   **பொன்றாது நிற்பதொன்று இல்.** (குறள் 233)

   ஒப்பில்லாத உயர்ந்த புகழைத் தவிர இவ்வுலகத்தில் அழியாமல் இருப்பது வேறொன்றில்லை.

8. **மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
   **அற்றது போற்றி உணின்.** (குறள் 942)

   உண்ட உணவு செரித்த தன்மை ஆராய்ந்து போற்றிய பிறகு தக்க அளவு உண்டால், உடம்பிற்கு மருந்து என ஒன்று வேண்டியதில்லை.

**வளாகங்களில் முதல் மூன்று நிலைகளையும் அடைந்த மாணவர்கள் அன்னைத் தமிழ்முற்றப் போட்டியில் பங்குபெறும் வாய்ப்பைப் பெறுவார்கள்.**

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.மாணவர்களை ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களை தயார்ப்படுத்துவது பெற்றோரினது கடமை